

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 8. திரு அம்மானை

(திருவண்ணாமலையில் அருளியது)

ஆனந்தக் களிப்பு

(தரவு கொச்சகக் கலிப்பா)





# திருச்சிற்றம்பலம்

செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்புஅறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்

1





பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆராலுங் காண்டற்கு அரியான் எமக்குஎளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழிஅருளி வந்துஎன் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்





இந்திரனும் மால்அயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன்அவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோள்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரஆர் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண்டான் தந்த
அந்தம்இலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்





வான்வந்த தேவர்களும் மால்அயனோடு இந்திரனும்
கான்நின்று வற்றியும் புற்றுஎழுந்தும் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு
ஊன்வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்புஎய்து
தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்





கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்





கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறுஒருவன்
தீட்டுஆர் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டாதன எல்லாங் காட்டிச் சிவம்காட்டித்
தாள்தாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடுஎய்த
ஆள்தான் கொண்டுஆண்டவா பாடுதுங்காண்
அம்மானாய்





ஓயாதே உள்குவார் உள்இருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதுஇருக்கும் பாதியனை
நாயான நம்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகுஏழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

7





பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

8





துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டம்முதல் ஆயினான் அந்தம்இலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழஅடியார்க்கு ஈந்தருளும்
அண்டம் வியப்புஉறுமா பாடுதுங்காண் அம்மானாய்





விண்ஆளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ஆளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ஆர் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்





செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாள்அடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண்
அம்மானாய்





மைப்பொலியும் கண்ணிகேள் மால்அயனோடு இந்திரனும்
எப்பிறவியும் தேட என்னையும்தன் இன்அருளால்
இப்பிறவி ஆட்கொண்டு இனிப்பிறவாமே காத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்கும் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண்
அம்மானாய்





கையார் வளைசிலம்பக் காதார் குழைஆட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டுஒலிப்பச்
செய்யானை வெண்ணீறு அணிந்தானைச் சேர்ந்துஅறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்





ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்துஇறந்து எய்த்தேனை
ஊனையும் நின்றுஉருக்கி என்வினையை ஒட்டுஉகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்துஇனிய
கோன்அவன்போல் வந்துஎன்னைத் தன்தொழும்பில்
கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய்

14





சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட்டு எச்சன் தலைஅரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுஉகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்





ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுள்கலந்து

தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்

வானோர் அறியா வழிஎமக்குத் தந்தருளும்

தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்

ஆனா அறிவாய் அளவிறந்த பல்உயிர்க்கும்

கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்





சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்





கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மால்அயனும் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந்து இருந்துஇரங்கி எண்அரிய இன்அருளால்
ஒளிவந்துஎன் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய்





முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதுஇயலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்அப்பன் என்பார்கட்கு இன்அமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண்
அம்மானாய்





பெற்றி பிறர்க்கு அரியபெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்அடியார்
குற்றங்கள் நீக்கிக் குணம்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்பு அறுப்பான் தொல்புகழே
பற்றி இப்பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றிய பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்



ஸ்ரீ மாணிக்கவாசகர்